**அலவ்வ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அலவ்வ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் பிரகாரம் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குரியதாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த பி.ச. 14, 16, 19 அறிக்கைகள் தயாரித்து அதன் பெறுமதி பேரேட்டுக் கணக்கில் பதிவு செய்து அதன் பிரகாரம் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக 2017 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 1,654,659 தொகையான சம்பள மீளளிப்பு 2016 ஆம் ஆண்டில் உரிய சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 5,500,000 தொகையான சம்பள மீளளிப்பு மீளாய்வாண்டின் வருமானத்தில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டிற்குரியதாகச் செலுத்தப்பட்ட ரூபா 49,075 தொகையான கணக்காய்வுக் கட்டணம் மீளாய்வாண்டின் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய 2017 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 1,605,945 தொகையான மூலதன வருமானத்திற்காக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஓய்வூதியத் திணைக்களத்தின் அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் மேலும், செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புப் பணம் ரூபா 7,874,264 ஆக இருந்தபோதிலும், கணக்கில் அந்த மீதி ரூபா 7,967,500 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 93,236 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மின்சார உபகரணங்கள் களஞ்சியப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் உள்ளபடியான விநியோகித்தல் ரூபா 414,062 ஆக இருந்தபோதிலும், நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 533,157 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிக்கும் பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,773,771 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 18,241,671 தொகையான பெறவேண்டிய கணக்கு மீதியில் ரூபா 11,563,070 தொகை ஆண்டொன்றிற்கு மேற்பட்ட காலத்திற்குரியதாகும்.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,249,913 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலத்திலிருந்து தீர்க்கப்படாமல் காணப்படுகின்ற மீதி ரூபா 12,328,470 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 427,900 பெறுமதியான 14 காணிக் கூறுகளின் உரித்துறுதி / கையளித்தல் சான்றிதழ் மற்றும் ரூபா 20,585,063 பெறுமதியான 06 கணக்கு விடயங்களின் பதிவேடுகள் மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2011 ஆம் ஆண்டில் அலவ்வ பிரதேச சபை ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காசேட்டின் மீதிக்கும், பேரேட்டுக் கணக்குகளின் மீதிக்கும் இடையே காணப்பட்ட ரூபா 2,618,854 தொகையான வேறுபாடு கணக்குகள் குழு தீர்மானத்தின் பிரகாரம் நாட்குறிப்பு பதிவின் மூலம் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், நாட்குறிப்பு பதிவின் மூலம் 2016 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதியான ரூபா 3,136,098 பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 517,244 தொகை போதியளவான சரியான அதிகாரபலமின்றி நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,623,593 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,349,140 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 12,274,453 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

வாடகை, ஏனைய வருமானம் மற்றும் சம்பள மீளளிப்பு வருமானம் என்பன முறையே ரூபா 3,064,053 தொகை, ரூபா 3,065,040 மற்றும் ரூபா 5,607,384 இனால் அதிகரித்தமை நிதி விளைவின் அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் ரூபா 89 மில்லியன் வருமானமொன்றைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த அளவு சேகரிக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படவேண்டிய ரூபா 19 மில்லியன் தொகையில் 2016 ஆம் ஆண்டில் ரூபா 6 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

#### 2.3.2 வீதவரி

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட 4212 வீதவரி அலகுகளுக்காக ரூபா 2,084,321 தொகை 2016 ஆம் ஆண்டில் சிட்டையிடப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை ரூபா 1,181,887 ஆகும். அது ஒட்டுமொத்த கிடைக்கவேண்டிய வீதவரி வருமானத்தில் 57 சதவீதமாக இருந்ததுடன் ஆரம்ப நிலுவைப் பண மீதியில் ரூபா 534,511 தொகை மாத்திரமே அதாவது 38 சதவீதமான குறைந்த சதவீதமே அறவிடப்பட்டிருந்தது.

#### 2.3.3 கடை வாடகை

அலவ்வ நகரத்தில் புதிய பொதுச் சந்தைக் கட்டிடத்தில் 15 கடைகள் மீளாய்வாண்டில் ஆகஸ்ட் முதல் வாடகையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் சனவரி வரையிலும் அந்த வாடகைக்கு வழங்கல் தொடர்பாக எழுத்துமூல உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 2,658,812 தொகையான முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 9,611,639 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் என்பன அறவிடவேண்டியிருந்தன.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறமின்மைகள்

அலவ்வ பிரதேச சபைக்கு பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கிடைக்கின்ற நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேலைகளை உள்ளடக்கிய வேலைப் பதிவேடு முறையாகப் பேணப்படாதிருந்தமையால் சபை நிதியம் தவிர ஏனைய தரப்பினரிடமிருந்து கிடைத்த நிதிஏற்பாடுகளின் விபரங்களை உள்ளடக்கிய வேலைகள் தொடர்பான தகவல்கள்

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வேலைப் பதிவேட்டில் வெவ்வேறாக இனங்காண முடியாதிருந்தது.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான காணிக் கூறுகளின் பாதுகாப்பு வேலியை அமைத்து எல்லையை அடையாளப்படுத்தி சபைக்குச் சொந்தமானது என அறிவித்தல் பதாதை பொருத்தப்பட்டு ஆக்கபூர்வமான முறையில் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உரித்துறுதி இன்றி அல்லது பௌதீக ரீதியில் இனங்காண முடியாதிருந்த காணிக்கூறுகள் 12 ஆகும்.

(ஆ) அட்டிக்காகஹமூலவத்த என்ற பெயருடைய 3 றூட், 19 பேர்ச் அளவான விசாலமான காணி அங்கீகாரமின்றி கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

**3.3 இனங்காணப்பட்ட நட்டம்**

ரூபா 70 மில்லியன் செலவில் அலவ்வ பேரூந்து நிலையம் மற்றும் 28 கடைகளையுடைய புதிய சந்தைத் தொகுதி என்பன நிர்மாணிக்கப்பட்டு 2016 ஆகஸ்ட் மாதத்தில் 15 கடைகள் மாத்திரம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 சனவரி மாதம் வரையிலும் எஞ்சிய 13 கடைகளையும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் சபைக்கு உழைக்கக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தெரிவுப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட 05 வேலைகளின் மதிப்பீடுகளினதும், அளவிடை அறிக்கைகளினதும், அளவிடைப் பத்திரங்களினதும் மற்றும் கொடுப்பனவு அறிக்கைகளினதும் தயாரித்தல், பரீட்சிக்கப்பட்ட சிபாரிசு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்த அறிக்கைகளின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களாக கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், உரிய திகதி குறிப்பிடப்படாமல் அனேகமாகக் காணப்பட்டன.

(ஆ) அலவ்வ பிரதேச சபையின் கழிவுப்பொருள் நிலையத்தில் கூரையுடனான கூட்டுப் பசளைத் தளம் மற்றும் கூரையின்றிய கொங்கிறீட் தளம் என்பவற்றை நிர்மாணிக்கும் வேலையின் 13.4 மீற்றர் நீளம் மற்றும் 9.45 மீற்றர் அகலமான பகுதியில் கூரைக்காக சிங்க் உலோக தகரம் பொருத்தப்படாதிருந்ததுடன் 4” x 2” x 2” C பர்லின் நிர்மாணம் இரும்பினால் பூர்த்தி செய்யப்பட்டு அதற்காக துருப்பிடிக்காத நிறப்பூச்சு பூசப்பட்டிருக்கவில்லை. 10.7 மீற்றர் நீளம் மற்றும் 9.45 மீற்றர் அகலமான பகுதியை நிர்மாணிப்பதற்கு பயன்பத்தப்பட்ட 4” x 2” x 2” C பர்லினுக்காக கல்வனைஸ் வகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதில் துருப்பிடிக்காத நிறப்பூச்சு பூசப்பட்டிருக்கவில்லை.

**3.5 செயற்திட்டத்தின் தாமதம்**

2016 ஒக்தோபர் 20 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,502,611 தொகையான போப்பிட்டிய முன்பள்ளிப் பாடசாலைக் கட்டிட நிர்மாண வேலைக்கு பொருட்களை வழங்குவதற்கு முடியாதிருந்தமையைக் காரணமாகக் காண்பித்து வேலை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.6 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய சகல கழிவுப்பொருட்களும் நாளாந்தம் சேகரிக்கப்படாதிருந்ததுடன் நகரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்களிலிருந்து ஒரு உழவு இயந்திர அளவு மாத்திரம் பசளை உற்பத்திக்கு ஈடுபடுத்தப்பட்டு எஞ்சிய அளவு பிரதேசத்தின் பாரிய குழிகளில் அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.7 சுற்றாடல் பிரச்சினைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) அலவ்வ பிரதேச சபையில் கழிவுப்பொருள் நிலையம் அமைந்துள்ள காணிக்கு அடுத்தால் அமைந்துள்ள வன ஒதுக்கப் பிரதேசத்தில் சில வருடங்களுக்கு முன்னர் வகைப்படுத்தப்படாத கழிவுகள் அகற்றப்படாமையின் காரணமாக ஒதுக்கப்பிரதேசத்தில் 12 றூல்ஸ் மரங்கள் அளவில் இறந்திருந்தன. கழிவுகள் முறையான பிரகாரம் அகற்றப்படாமையின் காரணமாக வயல்வெளியின் எல்லை வரையும் கழிவுப்பொருட்கள் வழிந்தோடி குவிந்திருந்தது. இதன் காரணமாக பாரியளவிலான சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. அவ்வாறே தற்போதும் நகர பிரதேசங்களிலிருந்து மாத்திரம் கழிவுகள் சேகரிக்கப்படுவதுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்ட மொத்த அளவும் கூட்டுப்பசளை உற்பத்திக்காக பயன்படுத்த முடியாமையினால் பிரதேசத்தில் செங்கல் வெட்டுவதற்காக மண் எடுக்கப்பட்ட குழிகளுக்குள் கழிவுகள் அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தின் போது நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த அலவ்வ பேரூந்து நிலைய பொது மலசலகூடத்தில் கழிவுப்பொருள் ஒன்றுசேருகின்ற குழியை போதியளவான பிரகாரம் விரிவாக அமைக்கப்படாமை அல்லது நியமத்தின் பிரகாரம் பூர்த்திசெய்யப்படாமை என்ற எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலோ மலசலகூடத்தில் கழிவுப்பொருட்கள் எந்நேரமும் நிரம்பி வழிந்து அலவ்வ நகரத்தின் பிரதான வடிகாணுடன் ஒன்று சேர்கின்றமையால் கலிபவுசரை பயன்படுத்தி மலசலகூட கழிவுப்பொருட்களை நிரந்தரமாகவே அகற்றுதல் சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(இ) அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டிற்கான புதிய சுற்றாடல் அனுமதிப்பத்திர விநியோகங்கள் 28 உம், புதுப்பித்தல்கள் 64 உம் காணப்பட்டதுடன் அண்மித்த மூன்று ஆண்டுகளில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் மற்றும் விநியோகிக்கப்பட்ட அளவினை ஒப்பீடு செய்யும் போது சுற்றாடல் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாது செயற்படுகின்ற 66 வியாபார நிறுவனங்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த வியாபார நிறுவனங்களில் உரிய சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காமல் அந்த வியாபார நிறுவனங்கள் தொடர்ந்தும் நடாத்திச் செல்லப்படுகின்றதா, இல்லையா என பரீட்சித்து உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், உரிய சுற்றாடல் பிரச்சினைகளைத் தடுப்பதற்கோ அல்லது குறைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2016 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் 14 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 1,010,000 தொகையான நிதிஏற்பாட்டுத் தொகை முழுமையாக சேமிக்கப்பட்டமையினால் இலக்கிடப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படாத நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | நடைமுறைப் பொறுப்புக்கள் குறைத்துக் கணக்கீடு செய்தல. நடைமுறைச் சொத்துக்கள் குறைத்துக் கணக்கீடு செய்தல். நாட்குறிப்புப் பதிவுகள் பேணப்படாமை. வகைப்படுத்தல் வழுக்கள் பதிவேடுகள் மற்றும் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளுக்கிடையே வேறுபாடு காணப்பட்டமை. வேலைப்பதிவேடு மற்றும் கழிவுப்பொருள் நிலையத்திற்குரிய பதிவேடு என்பன நாளதுவரையாகப் பேணப்படாமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | பெறவேண்டிய நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | ஒவ்வொரு செலவின விடயத்திற்காகவும் மதிப்பீட்டு நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை முழுமையாக நிறைவேற்றப்படாமை. |
| (ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | கழிவுகள் வகைப்படுத்தப்படாமல் கையேற்றல், கழிவுகள் முறையாக அகற்றப்படாமையினால் சுற்றாடல் பிரச்சினைகள் மேலெழுந்தமை |
| (உ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் / புதுப்பித்தல் | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படாமல் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபாரங்கள் காணப்பட்டமை மற்றும் அவைகள் பரிசோதனைக்கு உட்படாமை |